بسم الله الرحمن الرحيم

# FIFTEENTH CENTURY HIJRA : GOD'S BLESSINGS

# ஹிஜ்ரா 15ம் நூற்றாண்டில் இறை அருள்கள்

இறைவன் எப்போது இந்த மண்ணில் மனிதனை படைத்தானோ அப்போதே, அவர்களை சீர்படுத்தி செம்மையாக முழுமைப்படுத்த, அவர்களிடத்தில் தூதர்களையும் ஏற்படுத்தினான். இது ஆரம்பகாலம் முதல் நடந்து வரும் இறை அருளாகும். பிறகு மனிதர்கள் அனைவரையும் ஒன்றிணைக்க அவன் எண்ணினான் அதற்காகவே ஹஸ்ரத் முஹமது (ஸ) - மை தோற்றுவித்து திரு-குர்-ஆனை அருளி இஸ்லாம் எனும் ஒரு முழுமையான மார்க்கத்தை உருவாக்கினான்.

முஸ்லீம்கள் என்று சொல்லப்படுகின்ற நாம் அனைவரும் ஹஸ்ரத் முஹமது நபி (ஸ) ஏற்றுகொண்டு இஸ்லாம் எனும் புனிதமார்க்கத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். முஹமது (ஸ) சமுதாயம் சீர்குலைந்து சிதறடிக்கப்பட்டு ஈமான் எட்டாகனியாக நம்மை பார்த்து ஏளனம் செய்துக் கொண்டிருந்த காலத்திலெல்லாம், அந்த சமுதாயத்தை உயிர்ப்பித்தும் ஈமானை திரும்ப பெற செய்ததும் ஒவ்வொரு நூற்றாண்டிலும் தோன்றிய முஜதீத்துகள் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும். ஒன்றாம் நூற்றாண்டில் அவதரித்த ஹஸ்ரத் உமரிப்னு அப்துல் அசீஸ் துவங்கி 14-ம் நூற்றாண்டில் வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹாக வருகை தந்த ஹஸ்ரத் மிர்ஸா குலம் அஹமது (அ) வரை அந்த புனித புரட்சிக்காக இவ்வுலகில் நியோகிக்கப்பட்டிருந்த இறை தூதர்களே ஆவார்கள்.

ஹிஜ்ரா 14-ம் நூற்றாண்டில் கலீஃபாவாகவும் இமாம் மஹ்தியாகவும் தோன்றிய அஹ்மது (அ) அவர்களை ஏற்றுக்கொண்ட நாம் அஹ்மதிகள் அதாவது உண்மையான நம்பிக்கையாளர்கள் என்றும் சொல்லுகிறோம்.

அஹ்மதிகளாகிய நாம் இறைவனை அன்பாளன் என்றும் அருளாளன் என்றும், கண்ணியமிக்கவன் என்றும் கருணைக் கூறியவன் என்றெல்லாம் கூறுகின்றோம். ஆம்! சரியே, இறைவன் மீண்டும் அதை நிரூபித்துவிட்டான். இறைவன் தனது அருளையும், கருணையையும், எப்படி நிரூபிக்கிறான்? தனது தூதர்கள் மூலமாக என்றும் நாம் நம்புகின்றோம் அல்லவா?.

**''உங்களிடத்தில் இருந்து உங்களிடம் ஒரு தூதனை ஏற்படுத்துவேன்''** என்ற இறைவன் வசனத்திலும் **''ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும், ஒவ்வொரு முஜதீதுகள் தோன்றுவார்கள்''** என்ற நபி மொழியிலும் **''நான் முதன்மையாகவும், இறுதியாகவும் அனுப்பப்பட்ட மஸிஹ் என்று உருமை கோரவில்லை. எனது பார்வையில் எனக்கு பிறகு பதினாயிரம் மஸீஹ்மார்கள் வரலாம்''** என்ற அஹ்மது (அ) ன் வசனத்திலும் அஹ்மதிகளாகிய உங்களுக்கு இப்போது சந்தேகம் உண்டோ? இல்லையென்றால் ஒன்றாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரையிலும், ஒவ்வொரு இரட்சகனை ஏற்படுத்தி இஸ்லாம் மார்க்கத்தை சீர்திருத்திய, சிறப்பித்த, புனிதப்படுத்திய, பாதுகாத்த இறைவன் இந்த பதினைந்தாம் நூற்றாண்டிலும் ஒரு இரட்சகனை ஏர்படுத்த மறந்து விடுவானோ? மறந்துவிட்டால் இறைவன் எப்படி கருணையாளனும், அருளாளனும் ஆவான்?

சபை தேர்ந்தெடுத்த ஒரு கலீஃபா இருப்பதால் இனி இறைவனால் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு தூதர் தேவையில்லை என்ற சுமார் இரண்டுகோடி வருகின்ற இன்றைய அஹ்மதிகளின் நம்பிக்கையும், குர்-ஆன்-னும் திருசுன்னத்தும் இருப்பதால், இனி ஒரு நபியின் தேவையில்லை என்ற நூறுகோடிக்கு மேற்பட்ட முஸ்லீம் மக்களின் நம்பிக்கையும் அடிப்படையாக ஒன்றல்லவா?

சூறத்துல் நூறில் இறைவன் நம்பிக்கை கொண்டவர்களுக்கு கொடுத்திருக்கின்ற வாக்குறுதியை சற்று கவனியுங்கள் அல்லாஹ் உங்களில் நம்பிக்கை கொண்டு நற்செயல் ஆற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவேன் என்று. முன் சமுதாயம் என்று அல்லாஹ் கூறியது ஹஸ்ரத் மூஸா (ஆ) வுடைய சமுதாயத்தை தான் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. மூஸா நபிக்கு பிறகு அவருடைய சமுதாயத்தில் மக்களால் தேர்ந்தெடுத்த கலீஃபாக்கள் இருந்தார்களா? இல்லை அங்கிருந்த கலீஃபாக்கள் அனைவரும் இறைவனால் நேரில் ஏற்படுத்திய கலீஃபாவாகவே இருந்தார்கள். அதைப்போன்று உங்களுக்கும் கலீஃபாக்களை தருவேன் என்றால் அது சபை தேர்ந்தெடுக்கின்ற கலீஃபாவாக இருந்தால் மேல் கூறிய இறை வசனத்துக்கு முரண்பாடல்லவா? மாறாக, இறைவனே நேரில் நியமிக்ககூடிய கலீஃபாவாகத்தான் இருக்க வேண்டும். அப்போது தான், அல்லாஹ்வின் வாக்குறுதி நிஜமாகிவிடுவது.

எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அதற்கு சரியானதும் யுக்திபூர்ணவுமான ஒரு விளக்கத்தை ஹஸ்ரத் அஹ்மது (அ) அவர்கள் நமக்கு தந்திருக்கின்றார்கள்.

1905 செப்டம்பர் 24-ம் நாள் ஒருவர் ஹஸ்ரத் அஹ்மது (அ) மிடம் கேட்டார் "உங்களுக்கு பிறகும் ஒரு முஜத்தீது வரலாமா? அதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) கொடுத்த பதில் இவ்வாறாகும்".

**"எனக்கு பிறகும் ஒரு முஜத்தீது வரவேண்டுமென்றால் அதில் என்ன தவறு? ஏனெனில் ஹஸ்ரத்மூஸா நபி (அ) மின் கிலாபத்து ஹஸ்ரத் ஈசா நபி(அ) மின் வருகையோடு முடிவடைந்தது. ஆனால்**

**ஹஸ்ரத் முகமது (ஸ) வின் கிலாஃபத்து இறுதி நாள் வரையிலும் தொடர்ந்து கொண்டிருக்கும்''.** (மல்பூஸாத்-வாளியம் 7 பக்கம் 119)

எவ்வளவு தெளிவாக இருக்கின்றது! எனக்கு பிறகும் முஜத்தீதுகளின் வருகையில் தவறில்லை என்று கூறிய அஹ்மது (அ) அவர்கள் அதற்கான காரணத்தையும் தெரிவிக்கின்றார். என்ன அக்காரணம்? ''அதாவது மூஸா நபி (அ) யின் கிலாஃபத் ஈசா நபி (அ) மில் முடிவடைந்தது. ஆனால் நபி (ஸ) வின் கிலாஃபத் இறுதி நாள் வரையிலும் நீடிக்கும்'' என்பது தான்.

ஹஸ்ரத் மூஸா நபியின் மரணத்திற்கு பிறகு அவரது சமுதாயத்தில் தோன்றிய முதல் கலீஃபா ஹஸ்ரத் யோசுவா ஆவார். அவரை தொடர்ந்து சாமுவேல், தாவீது, சோளமன்........................... ஏசேக்கியேல், தானியேல் ........................ அந்த வரிசையில் முடிவில் ஈசா நபி (அ) அவதரித்தார்.

மேல் கூறிய கலீஃபாக்களில் எவர் ஒருவரைக்கூட மக்களால் தேர்ந்தெடுக்க கூடியவராக இருக்கவில்லை. மாறாக அனைவரையும் இறைவனே நேரடியாக நியமிக்கப்பட்ட இறை தூதர்களாகவே இருந்தார்கள். அதற்கு புனித குர்-ஆன் சாட்சியாக விளங்குகின்றது. அதைபேன்று நபி கரீம் (ஸ) வின் கிலாஃபத் இறுதி நாள் வரையிலும் நிலை நிற்க வேண்டுமென்றால் அதில் இறைவனால் தேர்ந்தெடுக்கின்ற கலீஃபாக்களின் ஆன்மீக ஆட்சிதான் மலரவேண்டுமல்லவா? அவ்வாறே அது நடந்து வருகின்றது என்பது தான் உண்மை. நபி நாயகம் (ஸ) வுக்கு பிறகு ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் ஒவ்வொரு முஜத்தீதுகளை எழுப்பி இஸ்லாமிக கிலாஃபத்தை அவன் பலப்படுத்தி வருகின்றான். நபி (ஸ) பிறகு அல்லாஹ் நேரடியாக நியமித்த முதல் கலீஃபா ஹஸ்ரத் உமரிப்னு அப்துல் அசீஸ் ஆவார். தொடர்ந்து இமாம் ஷாபியும், அப்துல் கஸன் அஷாரியும், அபூ உபைது நைஷாபூரியும்............ இமாம் ஹசாலீயும், அப்துல் காதிர் ஜீலானியும்.......................... அந்த வரிசையில் 14-ம் நூற்றாண்டில் கலீஃபாவாக தோன்றியவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அ) ஆவார். அவருக்கு பிறகு இனி இறைவனால் நேரில் நியமிக்ககூடிய கலீஃபாக்கள் இல்லை என்றும், மக்கள் (நம்பிக்கையாளர்கள்) தேர்ந்தெடுக்கின்ற கலீஃபாக்கள் மட்டும் தான் இருப்பார்கள் என்றும் கூறுவது எவ்வளவு பரிகாசமான விஷயமாகும். அப்படி என்றால் ஈசா நபிக்கு பிறகும் அந்த கிலாஃபத் தொடர்ந்து வருகின்றதே. புனித பத்ரோஸில் துவங்கிய அக்கிலாஃபத் இன்றைய மார்பாப்பா பிரான்சிஸ் ஒன்றாமன் வரையிலும் நீடிக்கின்றது. ஈசா நபிக்கு பிறகு தொடர்ந்து வந்த மூன்று கலீஃபாக்கள் நேர்மையாளராகவே இருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் மூஸா நபியின் கிலாஃபத் ஈசா நபியோடு முடிவடைந்தது என்று அஹ்மது (அ) கூறியது எப்படி சரியாவது? அஹ்மது (அ) வார்த்தை தவறாகுமா? ஒரு பொழுதும் இல்லை. உண்மையில், ஹஸ்ரத் அஹ்மது (அ) அவர்களின் நோக்கத்தில் மட்டுமல்ல, அல்லாவின் பார்வையில் கூட மக்களால் நியமிக்ககூடிய கிலாஃபத் இறை கிலாஃபத்தேயல்ல. ஆகவே நபி (ஸ) வின் கிலாஃபத் இறுதி வரையிலும் நீடிக்க வேண்டுமென்றால் இந்த 15-ம் நூற்றாண்டிலும் இறைவனால் அனுப்புகின்ற ஒரு கலீஃபாவின் தேவையை எவருக்கும் மறுக்க இயலாது. சூறத்துல் நூறில் அல்லாஹ் தந்தருளிய வாக்குறுதியின் அடிப்படையிலும் மேல்கூறிய அஹ்மது (அ) மின் வசனத்தின் வெளிச்சத்திலும் இந்த நூற்றாண்டிலும் இறைவன் நமக்கு ஒரு கலீஃபாவை தந்தருளியிருக்கின்றான்.

ஆப்பிரிக்கா பூகண்டத்தில் மௌரீசியஸ் என்னும் நாட்டை சார்ந்த முனீர் அஹமது அஸீம் ஸாஹிப் இந்நூற்றாண்டில் இறைவன் என்னை கலீஃபாவாக தேர்ந்தெடுத்திருக்கின்றான் என்று கடந்த சில வருடங்களாக இறைவன் மீது ஆணையிட்டு உலகமக்களிடம் கூறி வருகின்றார்.

அவர் கூறுகிறார்

**''நான் முஜதீத்தும், கலீஃபத்துல்லாயும், ஒருநிலையில் நபியுமாக அனுப்பட்டிருக்கின்றேன். நான் முழுமைவாய்ந்த நபியல்லை (சுதந்திர நிபூவத்தல்ல) ஆனாலும் நான் நபியாவேன். வானங்களையும் பூமியையும் படைத்த இறைவன் என்னோடு பேசுகிறான். எனக்கு அவனில் இருந்த இறை அறிவிப்புகள் கிடைக்கின்றது. இறை இரகசியங்கள் அவன் எனக்கு வெளிப்படுத்துகிறான். இறை தூதர்களுக்கு கிடைக்கின்ற வெளிப்பாடுகள், சாத்தானின் ஆதிக்கத்தில் இருந்து முழுமையாக பாதுகாக்கப்பட்டவையாகும். எனக்கும் அதுபோன்று பரிசுத்தமான வெளிப்பாடுகளே கிடைக்கின்றது''.**

அன்பு சகோதரர்களே! இந்த பதினைந்தாம் நூற்றாண்டில் இறைவன் நம்மோடு கருணைக் காட்டியிருக்கின்றான். ஆகவே அவனில் இருந்து வந்த அருளை நிராகரித்தால் இந்த உலகில் மனித சீர்திருத்தத்திற்காக தோன்றிய அனைத்து நபிகளையும் அவருடைய மொழிகளையும், அவர்களுக்கு இறக்கப்பட்ட வேதத்தையும் மறுப்பதற்கு சமமாகும். அதனால் இறைவனின் வாக்குறுதியின் விடியலாக தோன்றிய இந்த இறை அருளை ஏற்றுக்கொண்டு ஒரு உண்மையான நம்பிக்கையாளர்களாக மாற அனைவருக்கும் இறைவன் வழிகாட்டுவானாகா. ஆமீன்.

**Proof Reader**
**Azim Ahmad**
**Sadr Sahibul Faraj**
**Kerala/ TamilNadu**
**E-mail: sahihazisulsat@gmail.com**
**Cell: 09789180817**

**Published by**
**Jamaat Ul-Sahih Al Islam**
**Dawa Department**
**Tamil Nadu. (Regd.No. A/693)**
**Web:www.jamaat-ul-sahih-al-islam.com**